நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, எல்.எல்.எம்.,

நீதித்துறை நடுவர், மேலூர்

**2026-**ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் **05-**ஆம் நாள் புதன்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.**210/2021**

**CNR.No. TNMD16-001418-2021**

...

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக காவல் ஆய்வாளர்<br>அனைத்து மகளிர் காவல்நிலையம், மேலூர்<br>குற்ற எண்.18/2021 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | 1) அருண்குமார், (வயது 36/2026)<br>த/பெ.செல்வராஜ்,<br>விஷால் நகர், மேலூர்.<br><br>2) முத்துப்பாண்டி, (வயது 56/2026)<br>த/பெ.செல்வராஜ்,<br>விஷால் நகர், மேலூர்.<br><br>3) செல்வராஜ், (வயது 58/2026)<br>த/பெ.ஆறுமணி,<br>விஷால் நகர், மேலூர்.<br><br>4) மூக்கம்மாள், (வயது 58/2026)<br>க/பெ.மகாமுனி,<br>வெள்ளளூர். |
| குற்றம் முறையிடப்பட்டது | : | 1 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 498(A) மற்றும் 4 of Dowry Prohibition Act. |
| குற்றம் வனையப்பட்டது | : | 1 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 498(A) மற்றும் 4 of Dowry Prohibition Act-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளன. |
| எதிரிகள் காவலுக்கு உட்படுத்தப்பட்டநாள் | : | A1 to A3 obtained anticipatory bail in Crl.M.P. No.120 of 2021, dated 13.05.2021 as per order of the Hon'ble Vacation Sessions Judge, Madurai.<br><br>A4 : கைது செய்யவில்லை. |
| இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் | : | 26.11.2021 |



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.05 06:18:17 +0530

தாக்கல் செய்த நாள்

| | | |
|---|---|---|
| பல்வகை மனு மற்றும் அதன் முடிவு | : | 1) U/s.311 Cr.P.C in Crl.M.P.No.1070 of 2026 = Allowed.<br><br>2) U/s.320 Cr.P.C in Crl.M.P.No.5 of 2026 = Dismissed. |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | : | (see table below) |

| | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 13.07.2026 | 13.07.2026 |
| PW2 | 23.07.2026 | 23.07.2026 |

| | | |
|---|---|---|
| குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளை விசாரித்த நாள் | : | 28.07.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம் மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம் | : | Nil |
| மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | : | Nil |
| தீர்மானம் | : | 1 முதல் 4 எதிரிகள் இ.த.ச பிரிவு 498(A) மற்றும் 4 of Dowry Prohibition Act-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானம். |
| தீர்ப்பு | : | முடிவாக, இந்த வழக்கில் 1 முதல் 4 எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை 1 முதல் 4 எதிரிகளுக்கு அளித்து, 1 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 498(A) மற்றும் 4 of Dowry Prohibition Act-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. இந்த வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை. மேலும் 1 முதல் 4 எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 437(A)-ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும். |



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.05 06:18:21 +0530

இவ்வழக்கானது கடந்த 26.11.2021-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 05.08.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.அருண் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

தீர்ப்புரை :-

1 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 498(A) மற்றும் 4 of Dowry Prohibition Act-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளன.

**1)** குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் **:**

இவ்வழக்கின் வாதி ரேவதி மேலூர் தாலுகா, வெள்ளளூரில் தன் பெற்றோருடன் வசித்து வருவதாகவும், வாதிக்கும், அருண்குமார் என்பவருக்கும் கடந்த 28.08.2020 அன்று கீழையூர் சிவன் கோயிலில் வைத்து இருவீட்டு உறவினர்கள் மற்றும் பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின்போது வாதிக்கு தனது பெற்றோர் 5 பவுன் தங்க நகையும், சுமார் ஒரு லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும் கொடுத்ததாகவும், மேலும் திருமணத்தின்போது வாதியின் கணவர் வீட்டார் கேட்டுக்கொண்டதின் பேரில் திருமண வரதட்சணையாக வாதியின் கணவருக்கு புதிய பல்சர் வண்டி வாங்கிக் கொடுத்ததாகவும், மேலும் திருமண நிச்சயதார்த்த செலவு மற்றும் திருமணச் செலவாக மட்டும் ரூ.1, 25,000/-ஐ வாதியின் பெற்றோர் செலவு செய்ததாகவும், திருமணம் ஆனது முதல் வாதி தனது கணவருடன் மாமனார், மாமியாருடன் சேர்ந்து வாழ்ந்து வந்ததாகவும், திருமணத்திற்கு முன்பு வாதியின் கணவர் நெல் குடோனில் கணக்குப்பிள்ளை வேலை பார்ப்பதாக சொன்னதாகவும், திருமணம் முடிந்தது முதல் ஒரு நாளும் அவர் அந்த வேலைக்கு சென்றதே இல்லை. அது பற்றி வாதி கேட்டதற்கு வாதியின் மாமியார் முத்துப்பாண்டி வாதியிடம் வெறும் சிறுக்கி உனக்கு இதெல்லாம் தேவையானு என்று சொல்லியே திட்டுவதுடன், வாதியின் கணவரிடம் இல்லாததும் பொல்லாததும் சொல்லி கொடுக்கவும், அதைக்கேட்டு வாதியின் கணவர் அடித்து மிகவும் தரக்குறைவான வார்த்தையில் திட்டுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். வாதியின் அம்மாவிடம் இரண்டு இலட்சம் ரூபாயை வரதட்சணையாக வாங்கிட்டுவானு வாதியின் கணவர் கேட்டுள்ளார். வாதி தன் அம்மா ஏற்கனவே கடன்ல கஷ்டப்படுறாங்க, நான் போய்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.05 06:18:25 +0530

பணமெல்லாம் இப்போதைக்கு கேட்க முடியாது என்று சொன்னதால் அங்கிருந்த சில்வர் தட்டைக்கொண்டு வாதியை தலையில் அடித்ததாகவும், மேலும் வாதியின் கணவர் வேறு ஒரு பெண்ணுடன் தகாத உறவில் ஈடுபட்டுக்கொண்டு திருமணம் ஆனது முதலே வாதியையும், புறக்கணித்து வந்ததாகவும், இரவு நேரங்களில் அந்த பெண் போன் செய்து அழைத்ததும், வாதியின் கணவரும் அவர் வீட்டிற்கு சென்றுவிடுவதாகவும், இது பற்றி கேட்டதற்கு வாதியின் கணவர் அப்படிதான்டீ செய்வேன், நீ என்ன புடிங்கிருவ என்று சொல்லி வாதியையும் அடித்ததாகவும், மேலும் திருமணத்திற்கு காரணமாக இருந்த தனது பெரியம்மா மூக்கம்மாள் இங்கிருந்து போன்மூலமாக வாதியின் மாமியாரிடம் ஏதோ பேசியவுடன் வாதியிடம் தனது மாமியார் பல்வேறு பிரச்சனைகளை செய்து வந்ததாகவும், மேலும் வாதியின் மாமனார் மிகவும் அருவருக்கத்தக்க வார்த்தையால் திட்டி வீட்டை விட்டு வெளியே போடி நாயே, வெறும் முண்ட, ஒழுங்கா சீர் செய்ய துப்பில்லாத பிச்சைக்கார குடும்பத்தில் பிறந்து உனக்கெல்லாம் எங்க வீடு கேட்குதாடி என்று திட்டியுள்ளார். அன்று இரவு முதலே வாதியின் மாமியார், மாமனார் வாதியை வழக்கம்போல் திட்டுவதும், வாதியின் கணவர் அடிப்பதையுமே வழக்கமாக கொண்டிருந்த நிலையில் கடந் இரண்டு மாதங்களுக்கு முன்னர் வாதியின் மாமியார் ஏண்டி வெறும் முண்ட, உனக்கெல்லாம் சாப்பாடு ஒரு கேடாடி எந்திருடி என்று சொல்லி சாப்பிட்டுக்கொண்டிருந்த சாப்பாட்டுத்தட்டை எத்தி மிதித்து தள்ளியுள்ளார். வாதியின் மாமனார் ஏய் இந்த முண்டைக்கும், சின்னவன் பொண்டாட்டிக்கு மருந்து கொடுத்து கற்பத்தை கலைச்சு வீட்டை விட்டு வெளியே அனுப்புன மாதிரி, மருந்து வாங்கி கொடுத்து இந்த நாயையும் நம்ம வீட்டை விட்டு அனுப்பு, வெளியே போய்த் தொலையட்டும் என்று சொன்னதாகவும், வாதியின் மாமியார் ஆமா பெரியவனுக்கு நல்ல பெரிய இடத்தில் இருந்து எல்லாம் வரன் வருது, இந்த முண்டைய இங்கிருந்து கிளப்பினால் போதும் என்று சொன்னதாகவும், அப்போது அங்கிருந்த வாதியின் கணவர், அடியே தேவிடியா முண்டை வரதட்சணை கொடுக்க துப்பில்லை அப்புறம் என்ன மயிருக்கு நீ இங்க இருக்க என்று சொல்லி வாதியின் முடியை பிடித்து இழுத்து அடித்துத் தள்ளிய குற்றம் புரிந்ததாக மேலூர், அனைத்து மகளிர் காவல்நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.210/2021 ஆக இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் 1 முதல் 4 எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் 1 முதல் 4 எதிரிகள் அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் 1 முதல் 4 எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து 1 முதல் 4



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.05 06:18:29 +0530

எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 498(A) மற்றும் 4 of Dowry Prohibition Act-ன்படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுக்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 12.07.2023 அன்று 1 முதல் 4 எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது 1 முதல் 4 எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்துள்ளார்கள். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1-ன் மூலம் அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2-ம், அ.சா.2-ன் மூலம் அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**4)** அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம் **:-**

**4.1)** அ.சா.1 ரேவதி தனது சாட்சியத்தில் நாகஜோதி தனது அம்மா என்றும், சாட்சிகள் செல்வம், கணேசன், சபாபதி தனது உறவினர்கள் என்றும், 1-ம் எதிரி தனது கணவர் என்றும், 2, 3 எதிரிகள் மாமனார், மாமியார். 4-ம் எதிரி பெரியம்மா என்றும், கடந்த 28.08.2020-ம் தேதி கீழையூர் சிவன் கோவிலில் வைத்து பெரியோர்கள் சம்மதத்துடன் தனக்கும், 1-ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது என்றும், திருமணம் முடிந்து சூரங்குண்டில் உள்ள விஷால் நகரில் 1 முதல் 3 எதிரிகளுடன் 3 மாதங்கள் குடியிருந்து வந்தார் என்றும், அதன் பின்னர் தங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றும், தங்களுக்குள் கருத்து வேறுபாடை பெரியோர்களை வைத்து பலமுறை பேசி பார்த்தார்கள் என்றும், கலைய முடியவில்லை என்றும், கடந்த 6 வருடங்களாக தாங்கள் தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றும், தற்போது பெரியோர்கள் முன்னிலையில் வைத்து பேசி முடித்துக்கொண்டார்கள் என்றும், தனது பெற்றோர்கள் தன்னை எப்படியாவது 1-ம் எதிரியுடன் சேர்த்து வைக்க எண்ணி ஒரு மனு தயார் செய்து அதில் தன்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதில் என்ன எழுதப்பட்டுள்ள விபரம் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.2)** அ.சா.2 மலையரசி தனது சாட்சியத்தில் தான் தற்போது மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார் என்றும், தங்கள் காவல்நிலையத்தில் கடந்த 2021-ம் வருடம் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த தரண்யா மற்றும்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.05 06:18:33 +0530

காவல் ஆய்வாளர் மயில் அவர்களையும், அவரது கையொப்பமும் தனக்கு நன்றாக தெரியும் என்றும், இவ்வழக்கு தரப்பினர்கள் நீதிமன்றத்திற்கு வெளியே பேசி சமாதானம் ஆகிவிட்டதாலும், அதன் அடிப்படையில் அரசு தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டபடியால், நீதியின் நலன் கருதி வழக்கின் விசாரணையை விரைந்து முடிப்பதற்காக வழக்கு கோப்பின் அடிப்படையில் நான் தற்போது கூடுதல் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறார் என்றும், கடந்த 29.04.2021ம் தேதி இரவு 8.00 மணிக்கு அன்றைய மேலூர் அனைத்து மகளிர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் தரண்யா நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 ரேவதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகாரின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.18/21, பிரிவுகள் 498(A), 294(b), 506(1) உ/இ 4 of TNPHW Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே அசாஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 என்றும், வழக்கு கோப்பை அன்றைய காவல்நிலைய காவல் ஆய்வாளர் மயில் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும், காவல் ஆய்வாளர் மயில் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் சாட்சிகள் அ.சா.1 ரேவதி, நாகஜோதி, செல்வம், கணேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் மாண்புமிகு மதுரை, முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் 1 முதல் 3 எதிரிகள் முன்ஜாமீன் பெற்றுவிட்டதால் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், இவ்வழக்கின் சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்து பிரிவுகள் 498(A), 294(b), 506(1) உ/இ 4 of TNPHW Act-லிருந்து பிரிவுகள் 294(b), 506(1) உ/இ 4 of TNPHW Act-ஐ நீக்கம் செய்து பிரிவு 4 of DP Act -ன்படி அ.சா.ஆ.5 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், இத்துடன் காவல் ஆய்வாளர் மயில் அவர்கள் தனது புலன்விசாரணை முடித்து 4-ம் எதிரி மூக்கம்மாளை தலைமறைவு எதிரியாக காட்டி மற்ற 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவுகள் 498(A), 4 of DP Act -ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5) கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழான விசாரணை**

அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் விசாரணையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது 1 முதல் 4 எதிரிகள் பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சிகளை மறுத்துவிட்டார்கள். மேலும் அவர்கள் தரப்பில் சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார்கள். அதனால் 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.05 06:18:37 +0530

என்று சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**6)** <u>அரசு தரப்பு வாதம் பின்வருமாறு:</u>

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் 1 முதல் 4 எதிரிகள் தான் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், 1 முதல் 4 எதிரிகள் மீது உள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே 1 முதல் 4 எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு எடுத்துரைத்தார்.

**7) 1** <u>முதல்</u> **4** <u>எதிரிகள் தரப்பில் வாதம் பின்வருமாறு:</u>

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே 1 முதல் 4 எதிரிகள் மீது உள்ள குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை 1 முதல் 4 எதிரிகளுக்கு வழங்கி 1 முதல் 4 விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**6)** <u>தீர்வு</u>**:-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அனைத்து வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

**7)** அரசு தரப்பு வழக்குப்படி, இவ்வழக்கின் வாதி ரேவதி மேலூர் தாலுகா, வெள்ளலூரில் தன் பெற்றோருடன் வசித்து வருவதாகவும், வாதிக்கும், அருண்குமார் என்பவருக்கும் கடந்த 28.08.2020 அன்று கீழையூர் சிவன் கோயிலில் வைத்து இருவீட்டு உறவினர்கள் மற்றும் பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின்போது வாதிக்கு தனது பெற்றோர் 5 பவுன் தங்க நகையும், சுமார் ஒரு லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும் கொடுத்ததாகவும், மேலும் திருமணத்தின்போது வாதியின் கணவர் வீட்டார் கேட்டுக்கொண்டதின் பேரில் திருமண வரதட்சணையாக வாதியின் கணவருக்கு புதிய பல்சர் வண்டி வாங்கிக் கொடுத்ததாகவும், மேலும் திருமண நிச்சயதார்த்த செலவு மற்றும் திருமணச் செலவாக மட்டும் ரூ.1,25,000/-ஐ வாதியின் பெற்றோர் செலவு செய்ததாகவும், திருமணம் ஆனது முதல் வாதி தனது கணவருடன் மாமனார், மாமியாருடன் சேர்ந்து வாழ்ந்து வந்ததாகவும், திருமணத்திற்கு முன்பு வாதியின் கணவர் நெல் குடோனில் கணக்குப்பிள்ளை வேலை பார்ப்பதாக சொன்னதாகவும், திருமணம் முடிந்தது முதல் ஒரு நாளும் அவர் அந்த



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.05 06:18:41 +0530

வேலைக்கு சென்றதே இல்லை. அது பற்றி வாதி கேட்டதற்கு வாதியின் மாமியார் முத்துப்பாண்டி வாதியிடம் வெறும் சிறுக்கி உனக்கு இதெல்லாம் தேவையானு என்று சொல்லியே திட்டுவதுடன், வாதியின் கணவரிடம் இல்லாததும் பொல்லாததும் சொல்லி கொடுக்கவும், அதைக்கேட்டு வாதியின் கணவர் அடித்து மிகவும் தரக்குறைவான வார்த்தையில் திட்டுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். வாதியின் அம்மாவிடம் இரண்டு இலட்சம் ரூபாயை வரதட்சணையாக வாங்கிட்டுவானு வாதியின் கணவர் கேட்டுள்ளார். வாதி தன் அம்மா ஏற்கனவே கடன்ல கஷ்டப்படுறாங்க, நான் போய் பணமெல்லாம் இப்போதைக்கு கேட்க முடியாது என்று சொன்னதால் அங்கிருந்த சில்வர் தட்டைக்கொண்டு வாதியை தலையில் அடித்ததாகவும், மேலும் வாதியின் கணவர் வேறு ஒரு பெண்ணுடன் தகாத உறவில் ஈடுபட்டுக்கொண்டு திருமணம் ஆனது முதலே வாதியையும், புறக்கணித்து வந்ததாகவும், இரவு நேரங்களில் அந்த பெண் போன் செய்து அழைத்ததும், வாதியின் கணவரும் அவர் வீட்டிற்கு சென்றுவிடுவதாகவும், இது பற்றி கேட்டதற்கு வாதியின் கணவர் அப்படிதான்டீ செய்வேன், நீ என்ன புடிங்கிருவ என்று சொல்லி வாதியையும் அடித்ததாகவும், மேலும் திருமணத்திற்கு காரணமாக இருந்த தனது பெரியம்மா மூக்கம்மாள் இங்கிருந்து போன்மூலமாக வாதியின் மாமியாரிடம் ஏதோ பேசியவுடன் வாதியிடம் தனது மாமியார் பல்வேறு பிரச்சனைகளை செய்து வந்ததாகவும், மேலும் வாதியின் மாமனார் மிகவும் அருவருக்கத்தக்க வார்த்தையால் திட்டி வீட்டை விட்டு வெளியே போடி நாயே, வெறும் முண்ட, ஒழுங்கா சீர் செய்ய துப்பில்லாத பிச்சைக்கார குடும்பத்தில் பிறந்து உனக்கெல்லாம் எங்க வீடு கேட்குதாடி என்று திட்டியுள்ளார். அன்று இரவு முதலே வாதியின் மாமியார், மாமனார் வாதியை வழக்கம்போல் திட்டுவதும், வாதியின் கணவர் அடிப்பதையுமே வழக்கமாக கொண்டிருந்த நிலையில் கடந் இரண்டு மாதங்களுக்கு முன்னர் வாதியின் மாமியார் ஏண்டி வெறும் முண்ட, உனக்கெல்லாம் சாப்பாடு ஒரு கேடாடி எந்திருடி என்று சொல்லி சாப்பிட்டுக்கொண்டிருந்த சாப்பாட்டுத்தட்டை எத்தி மிதித்து தள்ளியுள்ளார். வாதியின் மாமனார் ஏய் இந்த முண்டைக்கும், சின்னவன் பொண்டாட்டிக்கு மருந்து கொடுத்து கற்பத்தை கலைச்சு வீட்டை விட்டு வெளியே அனுப்புன மாதிரி, மருந்து வாங்கி கொடுத்து இந்த நாயையும் நம்ம வீட்டை விட்டு அனுப்பு, வெளியே போய்த் தொலையட்டும் என்று சொன்னதாகவும், வாதியின் மாமியார் ஆமா பெரியவனுக்கு நல்ல பெரிய இடத்தில் இருந்து எல்லாம் வரன் வருது, இந்த முண்டைய இங்கிருந்து கிளப்பினால் போதும் என்று சொன்னதாகவும், அப்போது அங்கிருந்த வாதியின் கணவர், அடியே தேவிடியா முண்டை வரதட்சணை கொடுக்க துப்பில்லை அப்புறம் என்ன மயிருக்கு நீ இங்க இருக்க என்று சொல்லி வாதியின் முடியை பிடித்து இழுத்து அடித்துத் தள்ளிய குற்றம்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.05 06:18:45 +0530

என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**8)** இந்த வழக்கில் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 28.08.2020-ம் தேதி கீழையூர் சிவன் கோவிலில் வைத்து பெரியோர்கள் சம்மதத்துடன் தனக்கும், 1-ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது என்றும், திருமணம் முடிந்து சூரங்குண்டில் உள்ள விஷால் நகரில் 1 முதல் 3 எதிரிகளுடன் 3 மாதங்கள் குடியிருந்து வந்தார் என்றும், அதன் பின்னர் தங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றும், தங்களுக்குள் கருத்து வேறுபாடை பெரியோர்களை வைத்து பலமுறை பேசி பார்த்தார்கள் என்றும், கலைய முடியவில்லை என்றும், கடந்த 6 வருடங்களாக தாங்கள் தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றும், தற்போது பெரியோர்கள் முன்னிலையில் வைத்து பேசி முடித்துக்கொண்டார்கள் என்றும், தனது பெற்றோர்கள் தன்னை எப்படியாவது 1-ம் எதிரியுடன் சேர்த்து வைக்க எண்ணி ஒரு மனு தயார் செய்து அதில் தன்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றும்,அதில் என்ன எழுதப்பட்டுள்ள விபரம் தனக்கு தெரியாது என்று அரசு தரப்புக்கு விரோதமாக பிறழ் சாட்சியம் ஆகியுள்ளார். எதிரிகளும் அ.சா.1-ம் சமாதானமாக சென்றுவிட்டதாக கூறி குவிமுச பிரிவு 320-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது 13.07.2026-ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**9)** அரசு தரப்பில் அ.சா.1 பிறழ் சாட்சியாக அறிவிக்க கூறி அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் "தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் நடந்த உண்மைகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல" என்று அரசு தரப்புக்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

**10)** அ.சா.1 அரசு தரப்பில் பிறழ் சாட்சி ஆகியுள்ளதால் அ.சா.2 மலையரசி கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் தான் தற்போது மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார் என்றும், தங்கள் காவல்நிலையத்தில் கடந்த 2021-ம் வருடம் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த தரண்யா மற்றும் காவல் ஆய்வாளர் மயில் அவர்களையும், அவரது கையொப்பமும் தனக்கு நன்றாக தெரியும் என்றும், இவ்வழக்கு தரப்பினர்கள் நீதிமன்றத்திற்கு வெளியே பேசி சமாதானம் ஆகிவிட்டதாலும், அதன் அடிப்படையில் அரசு தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டபடியால், நீதியின் நலன் கருதி வழக்கின் விசாரணையை விரைந்து முடிப்பதற்காக வழக்கு கோப்பின் அடிப்படையில் நான் தற்போது கூடுதல் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறார் என்றும், கடந்த 29.04.2021ம் தேதி இரவு 8.00 மணிக்கு அன்றைய மேலூர் அனைத்து மகளிர்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.05 06:18:49 +0530

காவல்நிலைய சார்பு ஆய்வாளர் தரண்யா நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 ரேவதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகாரின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.18/21, பிரிவுகள் 498(A), 294(b), 506(1) உ/இ 4 of TNPHW Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே அசாஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 என்றும், வழக்கு கோப்பை அன்றைய காவல்நிலைய காவல் ஆய்வாளர் மயில் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும், காவல் ஆய்வாளர் மயில் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் சாட்சிகள் அ.சா.1 ரேவதி, நாகஜோதி, செல்வம், கணேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் மாண்புமிகு மதுரை, முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் 1 முதல் 3 எதிரிகள் முன்ஜாமீன் பெற்றுவிட்டதால் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், இவ்வழக்கின் சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்து பிரிவுகள் 498(A), 294(b), 506(1) உ/இ 4 of TNPHW Act-லிருந்து பிரிவுகள் 294(b), 506(1) உ/இ 4 of TNPHW Act-ஐ நீக்கம் செய்து பிரிவு 4 of DP Act -ன்படி அ.சா.ஆ.5 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், இத்துடன் காவல் ஆய்வாளர் மயில் அவர்கள் தனது புலன்விசாரணை முடித்து 4-ம் எதிரி மூக்கம்மாளை தலைமறைவு எதிரியாக காட்டி மற்ற 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவுகள் 498(A), 4 of DP Act -ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியமளித்துள்ளதால், அரசு தரப்பு வழக்கறிஞர் மற்ற சாட்சிகளை விசாரிக்காமல் விலக்கிக் கொண்டார். அதனால் அரசு தரப்பில் 1 முதல் 4 எதிரிகளின் குற்ற செயலானது உறுதி செய்யப்படவில்லை.

**12)** விசாரணை அதிகாரியான அ.சா.2-ஐ ஒத்துரைத்து புகார்தாரரான அ.சா.1 சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் 1 முதல் 4 எதிரிகள் அ.சா.1-னிடம் கூடுதலாக வரதட்சணை கேட்டு அடித்து கொடுமைப்படுத்தினார்கள் என்பதற்கு எந்தவொரு சாட்சிகளும் இல்லை. மேலும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எவ்வித சான்று பொருட்களையும் வெளி கொணரப்படவில்லை என்பதாலும் அ.சா.2-ன் சாட்சியம் வழக்கின் புலன்விசாரணை குறித்து மட்டுமே அமைந்துள்ளது என்பதாலும், 1 முதல் 4 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதாக இல்லை என்று இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.05 06:18:53 +0530

**13)** முடிவாக, இந்த வழக்கில் 1 முதல் 4 எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை 1 முதல் 4 எதிரிகளுக்கு அளித்து, 1 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 498(A) மற்றும் 4 of Dowry Prohibition Act-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**14)** இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**15)** மேலும் 1 முதல் 4 எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 437(A)-ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026- ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05-ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.05 06:18:57 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>இணைப்பு</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> :-

| வரிசை எண் | விசாரிக்கப்பட்ட தேதி | சாட்சிகளின் பெயர்கள் |
|---|---|---|
| அ.சா.1 | 13.07.2026 | ரேவதி |
| அ.சா.2 | 23.07.2026 | மலையரசி |

<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u> :-

| வரிசை எண் | குறியீடு செய்யப்பட்ட சாட்சி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | அ.சா.1 | புகார் மனுவில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | அ.சா.1 | சமாதான மனுவில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | அ.சா.2 | புகார் மனு |
| அ.சா.ஆ.4 | அ.சா.2 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | அ.சா.2 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:- இல்லை

எதிரிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட  சாட்சிகள்,

குறியிடப்பட்ட  சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்: இல்லை

குறிப்பு

1) வழக்கு விசாரணைகாலத்தில், 1 முதல் 4 எதிரிகள் நீதிமன்ற பிணையிலிருந்துள்ளார்.
2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3) வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது
4) தீர்ப்பின் நகல், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.05 06:19:01 +0530